සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

නාට්‍ය හා රංග කලාව I
நாடகமும் அரங்கியலும் I
Drama and Theatre I

58 T I

16.08.2019 / 0830 – 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

| பகுதி I | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

சுட்டெண் : ....................................

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி I இலுள்ள **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், அதனை பகுதி II இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.
※ பகுதி II இல் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

※ **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
※ இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

tamilguru.lk

1. "மனிதனது உள்ளத்தைத் தன்வசமாக்கி நிரப்பி அவ்வளவோடு நில்லாமல் வெளிப்படுத்தும் ஆற்றலே கலை" எனக் குறிப்பிட்டவர்
   (1) இராமதாஸ் முகர்ஜி
   (2) மா. இராசமாணிக்கனார்
   (3) பொ. மீனாட்சிசுந்தரனார்
   (4) ரவீந்திரநாத் தாகூர்
   (5) அரவிந்தர் (......)

tamilguru.lk

2. மேல்வருவனவற்றுள் மேலைத்தேய கோட்பாட்டாளரான 'எரிக் நியூட்டன்' கலை பற்றி முன்வைத்த கருத்து யாது?
   (1) "புலக்காட்சிப் பொருளே கலையாகும்."
   (2) "தூய உள்ளுணர்வின் வெளிப்பாடே கலையாகும்."
   (3) "மனித உணர்வுகளின் வெளிப்பாடே கலையாகும்."
   (4) "தான் பெறுகின்ற அனுபவத்தை பிறரும் அனுபவிக்கச் செய்வதே கலையாகும்."
   (5) "முனைப்புப் பெறுகின்ற அனுபவத்தை பிறரும் அனுபவிக்கச் செய்வதே கலையாகும்." (......)

3. மேல்வருவனவற்றுள் நாடக எழுத்துரு பற்றிய **தவறான** கூற்று யாது?
   (1) அது வார்த்தைகளின் கலையன்று, வார்த்தைகளைப் பயன்படுத்தும் கலையாகும்.
   (2) நாவல், சிறுகதையை விட தகவல்களைக் கூடுதலாகக் கொண்டிருக்கும்.
   (3) பெரும்பாலும் நடிப்பதற்காக மட்டுமே எழுதப்படும்.
   (4) ஆசிரியரிடமிருந்து பார்ப்போருடன் நபர்கள் மூலமாகப் பேசும்.
   (5) கரு, கதைப்பின்னல், மோதுகை என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும். (......)

More Past Papers at
tamilguru.lk

**4.** நாடகத்துடன் தொடர்புடைய மேல்வரும் கூற்றுக்களைக் கருதுக.

அ. நெறியாளரைத் தெரிவுசெய்தல்
ஆ. பாத்திரத்தைத் தெரிவுசெய்தல்
இ. விளம்பரம் செய்தல்
ஈ. ஒத்திகை பார்த்தல்
உ. நாடக எழுத்துருவைத் தெரிவுசெய்தல்

இவற்றுள் நாடக தயாரிப்பாளருடன் தொடர்புடைய கூற்றுக்கள் யாவை?

(1) அ, ஆ, இ (2) ஆ, இ, ஈ (3) இ, ஈ, உ (4) அ, இ, உ (5) ஆ, ஈ, உ (……)

**5.** மேல்வருவனவற்றுள் கிரேக்க நாடகாசிரியர் மெனாண்டரின் நாடகங்களின் இயல்பு யாது?

(1) ஆழமான கேலி, கிண்டல் அற்றவை.
(2) மிருகபட்சி வேட முகங்கள் அணியப்பட்டிருக்கும்.
(3) விசித்திரம், முரட்டுத்தனம், கொச்சைத்தனம் கொண்ட செம்மைத்தன்மை அற்றவை.
(4) அரசியல்வாதிகளையும் அரசியற் கொள்கைகளையும் கிண்டல் செய்யும்.
(5) சமகால மக்களின் குற்றங்களைக் கடிந்து முன்னோர் வாழ்வியலைப் பேணுவதாய் அமையும். (……)

**6.** கிரேக்க திறஜெடி நாடகக் கட்டமைப்பில் 'பரடெஸ்' (Parados) எனப்படுவது என்ன?

(1) நாடகத்தை அறிமுகம் செய்தல் (2) முதன்முதலில் ஆடுகளத்தினுள் புகுதல்
(3) சம்பவங்கள் காட்சிகளாக நிகழ்த்தப்படல் (4) கூட்டு பக்திப்பாடல் நிகழ்த்தப்படல்
(5) இசைப்பா முகாரி எழுப்புதல் (……)

**7.** நாடக அரங்கக் கல்லூரியினர் தமது படைப்பான 'எந்தையும் தாயும்' நாடகத்தை முதன்முதலில் நிகழ்த்திய இடம் எது?

(1) படச்சட்ட அரங்கு (2) திறந்த வெளி (3) நாற்சார் அரங்கு
(4) வட்டக்களரி (5) தெருவெளிகள் (……)

**8.** உடல், அங்கங்கள், சைகைகள், அசைவுகளுடனும் ஒளி, உடை, இசை, ஒப்பனை போன்ற துணைக் கலைகளுடனும் கூடிய நடிப்பு நுட்பம்

(1) ஊமம் எனப்படும். (2) போலச்செய்தல் எனப்படும்.
(3) வகிபாகம் ஆடுதல் எனப்படும். (4) புதிதளித்தல் எனப்படும்.
(5) மறுதலைப்பாகமாடுதல் எனப்படும். (……)

**9.** "புனிதத்தன்மையின்பால் மக்கள் மேற்கொள்ளும் நடத்தைக் கோலங்களின் தொகுப்பு சடங்காகும்" எனக் குறிப்பிட்டவர்

(1) பக்தவத்சலபாரதி (2) ஜோன் ஹரீசன் (3) ஜே.ஜே. தொம்சன்
(4) நிட்ஜ்வே (5) கா. சிவத்தம்பி (……)

**10.** மேல்வருவனவற்றுள் "சடங்குகள் மனித வாழ்வைப் பண்படுத்துகின்றன" எனும் கூற்றிற்குப் **பொருந்தாத** விடயம் எது?

(1) சமூகப் பிணைப்பை வலுப்படுத்துதல்
(2) சமூகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துதல்
(3) மனிதனின் தகுதி, தகுதியின்மையை வெளிப்படுத்துதல்
(4) வாழ்வின் முக்கியமான நிகழ்வுகளை ஒழுங்குபடுத்துதல்
(5) செய்பவருக்கு உணர்வுபூர்வமான திருப்தியை ஏற்படுத்துதல் (……)

**11.** ஐரோப்பிய அரங்கில் சூழலியல் அரங்கைத் தோற்றுவித்தவர்

(1) குறொட்டொவ்ஸ்கி (2) பீற்றர் புறூக் (3) அகஸ்தா போல்
(4) றிச்சட் செக்னர் (5) அன்ரனி ஆர்த்தோ (……)

**12.** தமிழக அரங்க வரலாற்றில் சங்க காலத்தில் ஆடலில் சிறப்புற்றுத் திகழ்ந்தவள்

(1) விறலி (2) மாதவி (3) மாதரி
(4) பதியிலார் (5) சதுரிமாணிக்கம் (……)

[பக். 3 ஐப் பார்க்க

**13.** மேல்வருவனவற்றுள் வடபாங்கு தொடர்பில் **பிழையான** கூற்று எது?
(1) யாழ்ப்பாணத்திலிருந்து சென்றது.
(2) கதை புலசந்தோரால் மாத்திரம் சொல்லப்படும்.
(3) பாடல்கள் வல்லோசையுடையனவாகக் காணப்படும்.
(4) கடவுள் வாழ்த்து விருத்தத்தில் அமையும்.
(5) அரச பாத்திரம் செங்கோலுடன் வரும். (......)

More Past Papers at
tamilguru.lk

**14.** சோபோகிளிஸ் எழுதிய அவலச்சுவை நாடகங்களுள் மிகச் சிறந்த நாடகம் எனக் கருதப்படுவது
(1) அன்ரிகனி (2) ஈடிப்பஸ் மன்னன்
(3) ஈடிப்பஸ் அந்கொலோன்ஸ் (4) எலக்ரா
(5) அஜாக்ஸ் (......)

**15.** இசை நாடகங்களில் உணர்வுகள், செயற்பாடுகள் என்பன பாடலின் ஊடாகவே வெளிப்படும் என்பர். சத்தியவான் சாவித்திரியில் வரும் "ஆஹா சத்தியவான் என்பது நான்தானே......" எனும் பாடல் குறிப்பது,
(1) கடவுளை வேண்டுதலையாகும். (2) மகிழ்தலையாகும்.
(3) தர்க்கித்தலையாகும். (4) பாத்திரத்தை வர்ணித்தலையாகும்.
(5) காட்சியை வர்ணித்தலையாகும். (......)

**16.** தொலைக்காட்சி நாடகத்தின் சிறப்பியல்பாய் அமைவது
(1) கலையகம் பிரதானமானதாக இருத்தல் (2) மனம் எனும் அரங்கில் நிகழல்
(3) தொடர் நாடகங்களாக இருத்தல் (4) கேட்டலுக்கு முக்கியத்துவம் வழங்கப்படல்
(5) யதார்த்தமானதாக இருத்தல் (......)

**17.** ஈடிப்பஸ் நாடகத்தின் 'மோதுகை' எனக் கொள்ளப்படுவது
(1) விதியின் கையில் ஆட்டுவிக்கும் அவலம்
(2) அவலநாயகனின் மனித நிலைப்பட்ட துன்பம்
(3) தனிமனிதனுக்கும் இறை நியதிக்கும் இடையிலான போராட்டம்
(4) ஈடிப்பசுக்கும் தந்தைக்கும் இடையிலான போராட்டம்
(5) உயர்பீடத்தில் இருப்பவர் அழிக்கப்படுதல் (......)

**18.** நாடகமொன்றின் வகைப்பாட்டை வெளிப்படுத்துவது
(1) கரு (2) மோதுகை (3) கதைப்பின்னல்
(4) மோடி (5) பாத்திரங்கள் (......)

**19.** இராவணேசன் நாடகத்தில் தொடக்கத்திலேயே இரண்டு பாத்திரங்களுக்கிடையேயான முரண் ஆரம்பிக்கின்றது. அப்பாத்திரங்கள் இரண்டும் யாவை?
(1) இராவணன் - சீதை (2) இராவணன் - மண்டோதரி (3) இந்திரஜித் - இலக்குவன்
(4) இராவணன் - தூதன் (5) கும்பகர்ணன் - இராமன் (......)

**20.** 'கோடை' நாடகத்தில் வரும் மேல்வரும் உரையாடல் பகுதியைக் கருதுக.
A : ஆயிரங்கால் மண்டபம் அக்காலத்திருந்தனவாம்.
எங்களது கோயிலுக்கோ!
B : எட்டுத் தூண்.
A : எட்டுக்கும் சாந்தேதும் பூசி சரிக்கட்ட காலமில்லை.
இவ்வுரையாடலில் இடம்பெறும் A, B ஆகிய பாத்திரங்கள் முறையே யாவை?
(1) மாணிக்கம், சோமு (2) மாணிக்கம், செல்வம் (3) பஞ்சையர், மாணிக்கம்
(4) சோமு, கமலி (5) பஞ்சையர், சோமு (......)

**21.** உணர்ச்சிகள் உடலில் வெளிப்படுவதை 'மெய்ப்பாடு' எனக் குறிப்பிட்ட நூல்
(1) கலித்தொகை (2) சிலப்பதிகாரம் (3) தொல்காப்பியம்
(4) பரத சாஸ்திரம் (5) கவிதையியல் (......)

[பக். 4 ஐப் பார்க்க

More Past Papers at
tamilguru.lk

**22.** மேல்வருவனவற்றுள் மேடை முகாமையாளரின் பணி எது?
(1) ஒத்திகைகளை மேற்கொள்ளல்
(2) தயாரிப்புச் செயன்முறைகளில் ஈடுபடுதல்
(3) நினைவூட்டச் செயற்பாடுகளில் (promting) ஈடுபடுதல்
(4) காட்சிகளை ஒழுங்குபடுத்துதல்
(5) சக பார்ப்போராகச் செயற்படுதல் (......)

**23.** பார்ப்போரை 'சகிர்தயர்' என அழைக்கும் நாடக மரபு யாது?
(1) கிரேக்க மரபு (2) ரோம மரபு (3) யப்பானிய மரபு
(4) இந்திய மரபு (5) சீன மரபு (......)

**24.** "பார்ப்போர் என்பவர் வெறும் பார்ப்போராக இருக்காது செயன்முனைப்புள்ள பங்குகொள்பவராக மாறவேண்டும்" எனக் குறிப்பிட்டவர்
(1) அரிஸ்டோட்டல் (2) பரதமுனிவர் (3) அகஸ்தா போல்
(4) போட்டோல்ட் பிறெ.்ட் (5) பின்ரர் (......)

**25.** "நாடகத்தின் கருப்பொருள் விஞ்ஞானபூர்வமான கண்டுபிடிப்புகளிலிருந்து எடுக்கப்பட்டதாகவும், உண்மையான வாழ்வில் அவதானிக்கப்பட்டவையாகவும் இருக்கவேண்டும்" எனக் குறிப்பிட்டவர்
(1) ஒஸ்கார் புரொக்கற் (2) கோணேல் (3) ரசீன்
(4) எமிலி சோலா (5) றிச்சர்ட் சதண் (......)

**26.** மேல்வருவனவற்றுள் ஸ்ரனிஸ்லவ்ஸ்கி முன்வைத்த நுட்பமுறைகள் **அல்லாத** விடயங்கள் யாவை?
(1) கற்பனைப் பாவனை நிலை, தரப்படும் சூழல்
(2) கற்பனை செய்தல், தளர்வுநிலை
(3) தசைகளின் தளர்நிலை, தொடர்புகொள்ளல்
(4) உணர்வுபூர்வமான விசுவாசம், உணர்ச்சி வெளிப்பாடு
(5) உணர்வுபூர்வமான ஞாபகங்கள், தளர்வுநிலை (......)

**27.** குறொட்டொவ்ஸ்கியின் வறுமை அரங்கின் முக்கியமான பண்பு யாது?
(1) நடிகரின் உடலுக்கும் மூளைக்கும் முக்கியத்துவம் கொடுத்தல்
(2) பார்ப்போரும் பங்குபற்றும் முறையும் முக்கிய இடம் வகித்தல்
(3) வார்த்தைகளற்ற உணர்ச்சிப்பாங்கான கூட்டுமத்தைக் கையாள்தல்
(4) நாடகத்தைப் பிரயோக அரங்க நுட்பங்களுடன் வடிவமைத்தல்
(5) பார்ப்போரை செயல்முனைப்பானவர்களாக ஆக்குதல் (......)

**28.** 'ஈழத்தில் நாடகமும் நானும்' எனும் அரங்கியல் நூல் எது பற்றியது?
(1) நாடகம் எழுதும் முறை (2) நாடகம் தயாரிக்கும் முறை
(3) அரங்க வரலாறு (4) நடிப்பு அனுபவம்
(5) அரங்கக் கட்டுமானம் (......)

**29.** இலங்கையில், ஆங்கிலக் கல்வியினால் உருவான மத்தியதர வர்க்கத்தினரின் இயல்பு நிலைச் சித்திரிப்பினை தொடக்கி வைத்தவர்
(1) கிங்ஸ் பெரிதேசிகர் (2) விபுலானந்த அடிகள் (3) க. கணபதிப்பிள்ளை
(4) கலைச்செல்வன் (5) எதிரிவீர சரச்சந்திர (......)

**30.** சிங்கள தொவில் சடங்கரங்கு நிகழ்த்தப்படும் அரங்கவெளி
(1) கரலிய (2) பூங்குடில் (3) தானயம்பல
(4) களத்துமேடு (5) திறந்த வெளியரங்கு (......)

**31.** யப்பானிய நடிப்பு மோடியில் 'மை' (MIE) எனப்படுவது
(1) தீவிரத் தன்மை கொண்ட மோடி
(2) பெருங்காட்சி, மோடிமைப்படுத்தப்பட்ட மோடி
(3) தாக்கமான வகை மாதிரியான மோடி
(4) குறியீட்டுப் பாங்கு, ஊமம், நடனம் ஆகியவற்றைக் கொண்ட மோடி
(5) பிரபல்யமானதும் நிலைநிறுத்தப்பட்டதுமான மோடி (......)

[பக். 5 ஐப் பார்க்க

**32.** "சீன பீஜிங் ஒபேராவில் நடிகர் அணியும் வேட உடைகள், அதன் வர்ணங்கள் ஊடாகவே பாத்திரங்களும் இயல்புகளும் வெளிப்படுத்தப்பட்டன." ஒபேராவில் வரும் மஞ்சள் நிற ஆடை அணிந்தவர்கள்
(1) மந்திரிகளும் இராணுவத்தினரும் ஆவர்.
(2) அரச அலுவலர்களும் படை அதிகாரிகளும் ஆவர்.
(3) சக்கரவர்த்திகளும் அவர்களின் உறவினரும் ஆவர்.
(4) இளம் வயதினரும் வயது முதிர்ந்தோரும் ஆவர்.
(5) முரட்டுச் சுபாவமுடைய சக்கரவர்த்திகள் ஆவர். (......)

**33.** 'கொஹங்க கங்காரிய' சடங்கு செய்யப்படுவதற்கான காரணம் **அல்லாதது** எது?
(1) கடந்த போகத்தில் நல்ல விளைச்சல் தந்தமை
(2) விஜயன் குவேனிக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றியமை
(3) பாண்டு வசுதேவன் வேங்கைப்புலி ஒன்றைக் கண்டு பயந்தமை
(4) 'கொஹங்க' என்ற பாதிப்பிசாசும் பாதிக்கடவுளுமான உருவத்தை மகிழ்வித்தல்
(5) குடும்பக் கஸ்டத்தை நீக்குதலும் ஊருக்கும் நாட்டுக்கும் நன்மை கிடைக்கச் செய்தலும் (......)

**34.** சிங்கள 'நாடகம்' இல் கடவுள் வாழ்த்துப் பாடுபவர்
(1) பகுபூதய்யா (2) கோணங்கி (3) விகடகவி
(4) பொத்தே குரு (5) கட்டியக்காரன் (......)

**35.** சிங்கள நாடக வரலாற்றில் 'வீதி நாடக உலகின் அரசன்' என வர்ணிக்கப்படுபவர்
(1) தம்ம ஜாகொட (2) ஆர்.ஆர். சமரக்கோன்
(3) காமினி ஹத்தொட்டுவேகம (4) சுகதபால டி சில்வா
(5) குணசேன கலப்பதி (......)

**36.** யப்பானிய பிரபுத்துவ சடங்காசார வாழ்வின் காட்சிகளைச் சித்தரிக்கும் நாடகம்
(1) நோ (2) கபுக்கி (3) புன்ரகு (4) கோவாகா (5) கியோஜின் (......)

**37.** மத்தியகால பொது வணக்க முறை நாடகங்கள் ஆற்றுகை செய்யப்பட்ட அரங்கவெளி
(1) தேவாலயம் (2) ஊர்தி அரங்கு (3) பூத் அரங்கு
(4) பட்டணச் சதுக்கம் (5) மான்சன் அரங்கு (......)

**38.** பிரச்சினை நாடகங்களை மேற்கு ஐரோப்பாவில் தொடக்கி வைத்தவர்
(1) ஹென்றிக் இப்சன் (2) அன்ரன் செக்கோவ் (3) கார்சியா லோகா
(4) லூயி பிராண்டலோ (5) ஓகஸ்ற் ஸ்ரின் பேர்க் (......)


**39.** படத்தில் காட்டப்பட்டுள்ள கலைஞர் வைத்திருக்கும் வாத்தியம் யாது?
(1) கிற்றார்
(2) சித்தார்
(3) வீணை
(4) தம்புரா
(5) குயிக்குலின்

More Past Papers at
tamilguru.lk



(......)

**40.** மேல்வருவனவற்றுள் 'சிருங்காரம்' எனும் ரசத்தை வெளிப்படுத்தும் தெரிவு யாது?



(1) (2) (3) (4) (5)

(......)

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

(නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus)

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

නාට්‍ය හා රංග කලාව I
நாடகமும் அரங்கியலும் I
Drama and Theatre I

58 T I

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

※ உபபகுதி **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் உபபகுதி **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

### உபபகுதி A

**1.** (i) 'கலை' என்ற எண்ணக்கரு பற்றி பாடசாலை, சமூகம் ஆகியவற்றுடன் தொடர்புபடுத்திச் சுருக்கமாக விவரிக்குக.
(ii) தரப்பட்ட சிறுகதையொன்றை ஆற்றுகையாக உருவாக்குவதில் காணப்படும் சாதக, பாதகங்களைச் சுருக்கமாக விவரிக்குக.
(iii) சமகால சமூகத்தின் நிலைமையைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ளதக்க ஆற்றுகையொன்றைக் குறிப்பிட்டு, அதில் பிரதியின் (Script) முக்கியத்துவம் பற்றி விளக்குக.
(5 × 3 = 15 புள்ளிகள்)

**2.** (i) சமஸ்கிருத நாடகத்தின் 'கதைப்பின்னல்', 'கட்டமைப்பு' என்பவற்றைச் சுருக்கமாக விவரிக்குக.
(ii) நாட்டிய சாஸ்திரம் கூறும் **இரண்டு** வகை நடிப்புப் பாணிகள் பற்றித் தெளிவுபடுத்துக.
(iii) சமகால ஈழத்து அரங்கில் நாட்டிய சாஸ்திரத்தின் பிரயோகம் பற்றி விளக்குக.
(5 × 3 = 15 புள்ளிகள்)

**3.** சேக்ஸ்பியரின் 'குளோப்' அரங்கு, ஈழத்துப் பாரம்பரிய 'வட்டக்களரி' அரங்கு என்பவற்றில் மேல்வருவன அமையுமாற்றை விவரிக்குக.
(i) ஆற்றுகை வெளி
(ii) ஆற்றுகை முறைமை
(iii) பார்வையாளர் துலங்கல் (5 × 3 = 15 புள்ளிகள்)

### உபபகுதி B

**4.** ஈழத்தின் வெவ்வேறு காலப் பண்பாடுகளில் மேற்கிளம்பிய வெவ்வேறு அரங்க முறைமைகள் **இரண்டை** ஒப்பிட்டு விவரிக்குக. (15 புள்ளிகள்)

**5.** பாரம்பரிய சமயச் சடங்குகளை அரங்கநிலையில் நின்று விவரிப்பதுடன், அவை எவ்வாறு சமூகக் குழுமநிலை அரங்காக விளங்குகின்றன என்பதையும் விளக்குக. (15 புள்ளிகள்)

**6.** மேல்வருவனவற்றுள் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.
(i) யப்பானிய 'கபுக்கி'
(ii) அபத்த நாடகம்
(iii) குறுநாடக ஆக்கம்
(iv) ஜெர்சி குறொட்டொவ்ஸ்கி
(v) ஆற்றுப்படுத்தலாக அரங்கு (5 × 3 = 15 புள்ளிகள்)

※※※

More Past Papers at
tamilguru.lk

இங்கே வெறாக்கவும்

2981

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

(නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus)

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

නාට්‍ය හා රංග කලාව II
நாடகமும் அரங்கியலும் II
Drama and Theatre II

58 T II

17.08.2019 / 0830 – 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

| பகுதி I | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

சுட்டெண் : ....................................

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி I இலுள்ள **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், அதனை பகுதி II இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.
※ பகுதி II இல் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

பகுதி I

※ **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
※ இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**1.** உளவியல்சார் நாடகங்களைப் படைத்த கிரேக்க நாடகாசிரியர்
(1) மெனாண்டர் (2) ஈஸ்கிலஸ் (3) அரிஸ்டோபன்ஸ்
(4) சோபோகிளிஸ் (5) யூரிபிடிஸ் (......)

**2.** சிங்கள 'தொவில்' சடங்கரங்கில் வருகின்ற பாத்திரம்
(1) வெசமுனி (2) கோணங்கி (3) பொத்தேகுரு
(4) பபூன் (5) பகுபூதையா (......)

**3.** சங்க காலத்தில் கோடு, முழவு ஆகிய வாத்தியங்களை வாசித்தோர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
(1) பொருனர் (2) பாணர் (3) கோடியர்
(4) விறலியர் (5) வயிரியர் (......)

**4.** இசை, நடனம் ஆகியவற்றுடன் தொடர்புடைய ஆற்றுகைக் கலைஞர்கள்
(1) வி.வி. வைரமுத்து, அரசு
(2) சின்னமணி, பாலதாஸ்
(3) தைரியநாதன், கலாமணி
(4) பாலமுரளி கிருஷ்ணா, ருக்மணி அருண்டேல்
(5) பாலமுரளி கிருஷ்ணா, கண்ணன் (......)

**5.** த சோபேறி (The Choephori), புளுட்டஸ் (Plutus), அன்ரிகனி (Antigone) போன்ற கிரேக்க நாடகங்களின் ஆசிரியர்கள் முறையே
(1) ஈஸ்கிலஸ், அரிஸ்டோபன்ஸ், யூரிபிடிஸ்
(2) ஈஸ்கிலஸ், அரிஸ்டோபன்ஸ், சோபோகிளிஸ்
(3) யூரிபிடிஸ், அரிஸ்டோபன்ஸ், மெனாண்டர்
(4) யூரிபிடிஸ், மெனாண்டர், சோபோகிளிஸ்
(5) சோபோகிளிஸ், அரிஸ்டோபன்ஸ், மெனாண்டர் (......)

More Past Papers at
tamilguru.lk

[பக். 2 ஐப் பார்க்க

**6.** வடமோடிக் கூத்தில் வருகின்ற வீரர் பாத்திரங்களுக்குரிய தனித்துவமான ஆட்டங்கள்
(1) ஒய்யாரம், எட்டுப்போடல், தட்டடி (2) நாலடி, குத்துமிதி, பாய்ச்சல்
(3) ஒய்யாரம், தட்டடி, சிறுவட்டம் (4) எட்டடி, நாலடி, ஒய்யாரம்
(5) தட்டடி, எட்டடி, நாலடி (……)

**7.** 'எந்தையும் தாயும்' நாடகத்தில் ஒரே வகையான உளவியற்பாங்கான பாத்திரங்கள் யாவை?
(1) செல்லவரட்ணம், ஐயாத்துரை (2) மகேஸ்வரி, ஐயாத்துரை
(3) சங்கரப்பிள்ளை, வசந்தி (4) சங்கரப்பிள்ளை, செல்வரட்ணம்
(5) கண்ணன், வசந்தி (……)

**8.** 'பாசன்' எழுதிய நாடகங்களுள் மூன்று அங்கங்களைக் கொண்டது
(1) ஊருபங்கம் (2) கர்ணபார (3) அவிமாரக்க
(4) தூதவாக்கிய (5) பஞ்சராத்ர (……)

**9.** மதமாற்றம், பயணம், அந்தஸ்து, குடித்தனம் ஆகிய நாடகங்களை மேடையேற்றிய பல்கலைக்கழகம்
(1) கொழும்புப் பல்கலைக்கழகம் (2) பேராதனைப் பல்கலைக்கழகம்
(3) கிழக்குப் பல்கலைக்கழகம் (4) கட்டுபெத்த பல்கலைக்கழகம்
(5) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (……)

**10.** மேல்வருவனவற்றுள் கைவினை தொடர்பான **பொருத்தமற்ற** கூற்று யாது?
(1) மனிதனது கைத்திறன் வெளிப்பாடு சார்ந்தது.
(2) ஓர் அலங்காரக் கலை ஆகும்.
(3) உருவாக்கப் படிமுறை சார்ந்து ஆரம்பம் முதல் முடிவு வரை திட்டவட்டமான வரையறை காணப்படும்.
(4) எதிர்பார்க்கின்ற வடிவ முழுமையைப் பெறமுடியும்.
(5) ஆக்குபவருடைய உளவியல் கோலங்கள் அதனைச் சுவைப்போரை நேரடியாக ஊக்கப்படுத்தும்.
(……)

**11.** உலக நாடக வரலாற்றில் முதல் நெறியாளராகக் கொள்ளத்தக்கவர்
(1) ஸ்ரனிஸ்லவ்ஸ்கி (2) லோட்சேக்ஸ் மனிங்கன் (3) பேட்டோல்ட் பிறெ.்.ட்
(4) எமிலிசோலா (5) சேக்ஸ்பியர் (……)

**12.** 'மேடை முகாமைத்துவம்' என்ற சொற்பிரயோகம் பயன்படுத்தப்பட்ட காலப்பகுதி எது?
(1) 14 ஆம் நூற்றாண்டு (2) 16 ஆம் நூற்றாண்டு (3) 18 ஆம் நூற்றாண்டு
(4) 19 ஆம் நூற்றாண்டு (5) 20 ஆம் நூற்றாண்டு (……)

**13.** "மேடையில் துலங்குவதற்கேற்ப பார்வையாளர்கள் துலங்க வேண்டும்" எனக் குறிப்பிட்டவர்
(1) பிளேட்டோ (2) அரிஸ்டோட்டல் (3) றிச்சேர்ட் செக்னர்
(4) ஒகஸ்தா போல் (5) பீற்றர்புறூக் (……)

**14.** இலங்கையில் 'கோலம' ஆற்றுகை இன்றும் பயில்நிலையில் இருந்து வரும் பிரதேசம் எது?
(1) மேல் மாகாணம் (2) வடமத்திய மாகாணம்
(3) மத்திய மாகாணம் (4) கரையோர தாழ்நாட்டுப் பிரதேசம்
(5) உலர் வலயம் (……)

**15.** பங்குகொள் அரங்க முறைமையை அறிமுகம் செய்த மேலைத்தேய அரங்கவியலாளர்
(1) மக்ஸ்றெயின் காட் (2) யூசினோ பாபா (3) ஒகஸ்தா போல்
(4) றிச்சேர்ட் சதேண் (5) பீற்றர்புறூக் (……)

**16.** "நாடகாசிரியர் ஒருவர் உண்மையான வாழ்வின் ஒரு பகுதியை நேர்மையோடு மேடையில் அமைத்துக்காட்ட வேண்டும்" எனக் குறிப்பிட்டவர்
(1) அன்ரன் செக்கோவ் (2) பேர்ணாட்ஷா (3) ஹென்றிக் இப்சன்
(4) எமிலிசோலா (5) சாமுவேல் பெக்கட் (……)

**17.** யதார்த்த குறியீட்டுக் காட்சிகளைத் தமது எழுத்துக்களினூடாக அறிமுகம் செய்த நாடகாசிரியர்
(1) ஸ்றின்பேர்க் (2) அன்ரன் செக்கோவ் (3) பென்ஜோன்சன்
(4) ஸ்ரனிஸ்லவ்ஸ்கி (5) ஹென்றிக் இப்சன் (……)

[பக். 3 ஐப் பார்க்க

**18.** '30 செக்கனில் மூச்சு' என்ற நாடகத்தின் ஆசிரியர்
(1) யூரிப்பிடிஸ் (2) செனேக்கா (3) சாமுவேல் பெக்கட்
(4) அன்ரன் செக்கோவ் (5) கிறிஸ்தோபர் மாலோவ் (……)

**19.** நவவேட்கைவாத அரங்கின் தந்தையாகக் கருதப்படுபவர்
(1) யூஜினோ பாபா (2) அன்ரனின் ஆட்டுவாட் (3) ஒகஸ்தாபோல்
(4) பாதல் சர்க்கார் (5) ஹென்றிக் இப்சன் (……)

**20.** இந்தியாவின் ராம்லீலா அரங்க முறைமையைப் பின்பற்றிய மேலைத்தேய அரங்கவியலாளர்
(1) றிச்சேர்ட் செக்னர் (2) றிச்சேர்ட் சதேண் (3) றசீன்
(4) மக்ஸ்றெயின் கார்ட் (5) பீற்றர் புறூக் (……)

**21.** 1970 களில் எழுதபெற்ற வர்க்க முரண்பாடுகளைப் பேசும் நாடகங்கள் யாவை?
(1) மாயமான், கடுழியம், பொறுத்தது போதும்
(2) காலம் சிவக்கிறது, மாயமான், சங்காரம்
(3) விழிப்பு, கடுழியம், பொறுத்தது போதும்
(4) காலங்கள் அழிவதில்லை, மானிடம் என்பது புல்லோ, கோடை
(5) உயிர்த்த மனிதரின் கூத்து, மாயமான், மண்சுமந்த மேனியர் (……)

More Past Papers at
tamilguru.lk

**22.** கூத்தும் பரதமும் இணைந்த நாடக வடிவம்
(1) அற்றைத் திங்கள் (2) சக்தி பிறக்குது (3) கந்தன் கருணை
(4) உயிர்த்த மனிதரின் கூத்து (5) புதியதொரு வீடு (……)

**23.** சீன ஒபேறா நாடகத்தின் மூலகர்த்தாவாக விளங்கியவர்
(1) சியான் யூயின் (2) மீ லான் பாங்க் (3) வீ பூஷாகே
(4) சியாமி மொரோகியோ (5) சுவனாமி கியோட்சுகு (……)

**24.** கொப்பஸ் கிறிஸ்ரி விழாவில் பெருமளவில் மேடையேற்றப்பட்ட மத்தியகால நாடகம்
(1) அற்புத நாடகம் (2) மறைபொருள் நாடகம் (3) பொது வணக்கமுறை
(4) ஒழுக்கப்பண்பு நாடகம் (5) பாணர் இசை நிகழ்வு (……)

**25.** அரங்கிற்கு வராத பாத்திரங்கள் பேசுவதற்காக சேக்ஸ்பியர் கையாண்ட மொழி உத்தி
(1) தனிமொழி (2) புறச்சொல் (3) தன்னுரை
(4) ஆகாயக் கிளர்த்தல் (5) உருவகம் (……)

**26.** இரட்டைக் கதைப்பின்னல் முறையில் அமைந்த சேக்ஸ்பியரின் சிறந்த அவலச்சுவை நாடகம்
(1) ஹம்லட் (2) கிங்லியர் (3) ஒத்தெல்லோ
(4) யூலியசீசர் (5) மக்பெத் (……)

**27.** மேல்வருவனவற்றுள் ஈடிப்பஸ் நாடகம் பற்றிய **தவறான** கூற்று எது?
(1) தீபிய புராணம் பேசுவது.
(2) கிரேக்க திறஜெடி வகையைச் சார்ந்தது.
(3) தெரிந்து செய்யும் தவறு பற்றியது.
(4) குழந்தை சண்முகலிங்கத்தால் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டது.
(5) நாயகனின் அவல நிலைப்பட்ட துன்பம் பற்றி எடுத்துக்கூறுவது. (……)

**28.** பட்டறை அரங்கினை அறிமுகம் செய்த மேலைத்தேய அரங்கவியலாளர்
(1) ஸ்ரனிஸ்லவ்ஸ்கி (2) அன்ரனி ஆட்டுவாட் (3) ஒகஸ்தாபோல்
(4) பீற்றர் புறூக் (5) ஜேர்சி குறோட்டோவ்ஸ்கி (……)

**29.** கிங்லியர் நாடகத்தில் வரும் பெண் பாத்திரங்களைக் கொண்ட தொகுதி
(1) எட்கர், கோனேல், கோடில்லியா (2) எட்மண்ட், றீகன், கோனேல்
(3) குளசெஸ்ரர், றீகன், கோனேல் (4) கோனேல், றீகன், கோடில்லியா
(5) றீகன், எட்மண்ட், எட்கர் (……)

[பக். 4 ஐப் பார்க்க

**30.** அரசியல் உள்ளடக்கத்தைக் கொண்டு ஆற்றுகை செய்யப்பெற்ற பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் நாடகங்கள் யாவை?
(1) துரோகிகள், தவறான எண்ணம்
(2) உடையார் மிடுக்கு, துரோகிகள்
(3) பொருளோ பொருள், கண்ணன் கூத்து
(4) முருகன் திருகுதாளம், சங்கிலி
(5) நாட்டவன் நகர வாழ்க்கை, பொருளோ பொருள் (……)

**31.** சிங்கள யதார்த்தவாத நாடகங்களைச் சமூக யதார்த்தம் தேடும் கலை ஊடகமாக மாற்றியமைத்தவர்
(1) தம்ம ஜாகொட (2) ஹென்றி ஜயசேன (3) குணசேன கலப்பதி
(4) தயானந்த குணவர்த்தன (5) சுகதபால டி சில்வா (……)

**32.** ஈழத்தில் வெளிவந்த நாடக சஞ்சிகைகளைக் கொண்ட தொகுதி எது?
(1) அரங்கம், ஓலை, காலச்சுவடு (2) வெளிச்சம், ஓலை, காலச்சுவடு
(3) அரங்கம், ஆற்றுகை, கூத்தரங்கம் (4) கலைமுகம், ஜீவநதி, ஆற்றுகை
(5) வெளிச்சம், கலைமுகம், ஜீவநதி (……)


**33.** பல்கலைக்கழக நாடக வளர்ச்சியில் பங்குகொண்ட நாடக ஆளுமையினர் யாவர்?
(1) இளைய பத்மநாதன், சு. வித்தியானந்தன், கா. சிவத்தம்பி, மா. சண்முகநாதன்
(2) சு. வித்தியானந்தன், கா. சிவத்தம்பி, எதிரிவீர சரத்சந்திரா, க. கணபதிப்பிள்ளை
(3) அ. முத்துலிங்கம், பிரான்சிஸ் ஜெனம், அ. நா. கந்தசாமி, சொக்கன்
(4) பௌசுல் அமீர், மரியசேவிய அடிகள், நந்தி, மாவை நித்தியானந்தன்
(5) நா. சுந்தரலிங்கம், சி. மௌனகுரு, க. சிதம்பரநாதன், அரசையா (……)

**34.** அரிஸ்டோட்டல் தனது கவிதையியலில் குறிப்பிட்டதன்படி நாடகத்திற்கு மிக அவசியமானது
(1) இசை (2) காட்சி (3) கதைப்பின்னல்
(4) கரு (5) சிந்தனை (……)

**35.** கிங்லியர் நாடகத்தில் வரும் மேல்வரும் உரையாடலைக் கருதுக.
A : இதுதான் சத்திய முடிவா?
B : அவரது ஊழி முடிவின் நிழலா?
C : வீழ்ந்து முடிய வேண்டியதுதான்.
மேற்படி உரையாடலில் இடம்பெறும் A, B, C ஆகிய பாத்திரங்கள் முறையே யாவை?
(1) எட்கார், எட்மண்ட், ஆல்பனி (2) லியர், செஸ்டர், எட்கார்
(3) கென்ட், எட்கார், ஆல்பனி (4) எட்மண்ட், எட்கார், கென்ட்
(5) செஸ்டர், எட்மண்ட், ஆல்பனி (……)

**36.** 'ஒரு பாவையின் வீடு' நாடகத்தில் அடிக்கடி பொய் சொல்லும் பாத்திரமாக நாடகாசிரியரால் சித்திரிக்கப்படும் பாத்திரம் யார்?
(1) ராங் (2) நோரா (3) கெல்மர்
(4) கிறிஸ்ரீனா (5) குரொக்ஸ்ரட் (……)

**37.** படத்தில் காட்டப்பட்டுள்ள வேட முகம் எந்த நாடக பாணிக்குரியது?
(1) திறஜெடி
(2) கொமெடி
(3) சற்றயர்
(4) வரலாறு
(5) பொது வணக்கவகை முறை



(……)

More Past Papers at
tamilguru.lk

[பக். 5 ஐப் பார்க்க

**38.** படத்தில் காட்டப்பட்டுள்ள அரங்கவியலாளர் யார்?

(1) ஹென்றிக் இப்சன்
(2) அன்ரன் செக்கோவ்
(3) பேட்டோல்ட் பிறெ.்.ட்
(4) பேர்னாட்ஷா
(5) றசீன்



(……)

**39.** படத்தில் காட்டப்பட்டுள்ளது 'வெனிஸ் நகர வணிகன்' நாடகத்தில் இடம்பெறும் எந்தப் பாத்திரமாகும்?

(1) அன்ரனியோ
(2) பகார்னியோ
(3) ஷைலொக்
(4) போர்சியா
(5) மாண்டலோ



(……)

**40.** படத்தில் காட்டப்பட்டுள்ள இந்திய நாடகாசிரியர் யார்?

(1) காளிதாசர்
(2) பாசர்
(3) ஸ்ரீ ஹர்சர்
(4) சூத்திரகர்
(5) பரதர்



(……)

* *

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

නාට්‍ය හා රංග කලාව II
நாடகமும் அரங்கியலும் II
Drama and Theatre II

58 T II

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

※ உபபகுதி **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் உபபகுதி **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

### உபபகுதி A

**1.** (i) வில்லியம் சேக்ஸ்பியரது 'கிங்லியர்' நாடகத்தின் பிரதான மோதுகை யாது? (3 புள்ளிகள்)

(ii) 'கிங்லியர்' பாத்திரம் பெருங்காட்சிப் பண்புகளுடன் வெளிப்படும் சந்தர்ப்பங்களை விளக்குக. (5 புள்ளிகள்)

(iii) பொதுமையான மனித உணர்வுகள் 'கிங்லியர்' நாடகத்தினூடாக வெளிக்கிளம்பும் விதத்தை உதாரணங்களுடன் விளக்குக. (7 புள்ளிகள்)

**2.** (i) 'இராவணேசன்' நாடகத்தின் கரு, மோடி, பாத்திரங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) இராவணன், மண்டோதரி ஆகிய பாத்திரங்களுக்கு இடையேயான மோதுகை செயல்நிலையில் வெளிப்படும் சந்தர்ப்பங்களை உதாரணங்களுடன் விளக்குக. (5 புள்ளிகள்)

(iii) இராவனேசன் நாடகத்தில் 'இந்திரஜித்' பாத்திரம் வளர்த்தெடுக்கப்பட்டுள்ள முறை பற்றி விளக்குக. (7 புள்ளிகள்)

**3.** (i) ஈழத்தில் தேன்றிய 'பா' நாடகங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) 'கோடை' நாடகப் பாத்திரச் சித்திரிப்பில் கிராமிய சமூகப் பண்பாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் துல்லியமாக வெளிப்படும் விதத்தை விளக்குக. (5 புள்ளிகள்)

(iii) 'கோடை' எழுத்துருவை மையப்படுத்தி அக்கால ஏகாதிபத்திய ஆட்சி முறை மக்களின் மனப்பாங்கில் ஏற்படுத்திய பாதிப்பினை விளக்குக. (7 புள்ளிகள்)

### உபபகுதி B

**4.** அபிக்ஞான சகுந்தலத்தில் மோதுகை வெளிப்படும் சந்தர்ப்பங்களை எடுத்துக்காட்டி, சகுந்தலை பாத்திரம் எவ்விதம் படிப்படியாக வளர்த்தெடுக்கப்படுகிறது என்பதனை விளக்குக. (15 புள்ளிகள்)

**5.** 1990 களுக்குப் பின்னரான ஈழத்துத் தமிழ் அரங்கு பரீட்சார்த்த அரங்க முயற்சிகளின் விளைபயனாக விருத்தி பெற்று வந்துள்ளது என்பதனை அக்கால சமூக, அரசியல், சூழலமைவு, அரங்குகளின் உள்ளடக்கம், அவ்வரங்குகளின் நெறியாள்கை முறைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (15 புள்ளிகள்)

**6.** பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) கட்டியக்காரன்
(ii) மகிடிக் கூத்து
(iii) சொக்கரி
(iv) பீஜிங் ஒபேறா
(v) மாதவியின் பதினொரு வகை ஆடல் (5 × 3 = 15 புள்ளிகள்)

More Past Papers at
tamilguru.lk

※ ※ ※